Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 8/2016 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW1 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | சுப்பிரமணி |
| Father's Name | – | |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | – | காவல் ஆய்வாளர் (ஓய்வு) |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 16th June 2022.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

முதல் விசாரணை :

நான் கடந்த 19-08-2013 ம் தேதி பொள்ளாச்சி நகர மேற்கு காவல் ஆய்வாளராகப் பணியாற்றி இரவு உட்கோட்ட இரவு அலுவலில் இருந்தபோது, அதிகாலை 4 மணிக்கு நல்லப்பா தியேட்டர் ஜங்ஷன் அருகே போலிஸ் பார்ட்டி தௌலக் நிஷா சிறப்பு உதவி ஆய்வாளர் பாலகிருஷ்ணன், மாசிலாமணி தலைமைக் காவலர் 989 பழனிச்சாமி, தலைமைக் காவலர் இயேசு பாலன், சுந்தர்ராஜன், சம்பத்குமார், முதல்நிலைக் காவலர் கார்த்தி, தலைமைக் காவலர் வெங்கடாச்சலம், ரவி ஆகியோர்களுடன் வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்தபோது, மேற்படி சாலையில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்த டாரஸ் லாரி பதிவு எண்.AP 26X 6829 நிறுத்தி சோதனை செய்தபோது, லாரியை ஓட்டி வந்த டிரைவர், கீளினர் இருவரும் இறங்கி ஓடிவிட்டனர். சந்தேகத்தின் பேரில் போலிஸ் உதவியுடன் லாரியை சோதனை செய்தபோது, மரக்கட்டைகள் அடிக்கி வைக்கப்பட்டிருந்தது. மரக்கட்டைகளின் அளவு சுமார் 6 ½ டன் அளவு இருக்கும். பின்னர் தப்பியோடிய டிரைவர் மற்றும் கீளினரின் அடையாளங்கள் சொல்லி VHF மூலம் அனைத்து காவல் நிலைய சோதனை சாவடிக்கும் தகவல் சொல்லப்பட்டது. பின்னர் மேற்படி லாரியையும் மரக்கட்டைகளையும் மகாலிங்கபுரம் காவல் நிலையத்தில் பாதுகாப்பிற்கு ஒப்படைக்கப்பட்டது. பின்னர் 21-08-2013 தப்பியோடிய டிரைவர் மற்றும் கீளினரை ஆகியோர்களை தேடி பல்லடம் ரோடு, கோவை ரோடு ஆகிய இடங்களில் தேடியும் கிடைக்காததால் தகவலாளிகளுக்கு தகவல் சொல்லிவிட்டு பின்னர் காலை 8 மணிக்கு நல்லப்பா தியேட்டர் ஜங்ஷனில் வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்தபோது, கோவை To பொள்ளாச்சி ரோட்டில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்த KL 41 B 2929 என்ற Innova காரை தணிக்கை செய்தபோது, அதில் இருந்த 6 நபர்களையும் தனித்தனியாக விசாரித்தபோது, தங்கள் விலாசங்களை முன்னுக்கு பின் முரணாக கூறியதால், மீண்டும் மீண்டும் விசாரித்ததில் அதில் ஒருவர் தனது பெயர் ரவி என்றும், 19-08-2013 தேதி பொள்ளாச்சி நல்லப்பா தியேட்டர் ஜங்ஷனில் பிடிப்பட்ட லாரியின் டிரைவர் என்றும், போலிஸ்க்கு பயந்து ஓடிவிட்டதாகவும், பின்னர் நானும், கீளினரும் செம்மரக்கட்டைகளை கேரளாவிற்கு கடத்தி செல்ல வழிகாட்டியாக இருந்த முஜி என்பவரை செல்போனில் அழைத்து நடந்த சம்பவத்தினை சொல்லி மேற்படி இருவரையும் வந்து அழைத்து செல்லுமாறு கூறியதாக மேற்படி முஜி பாலக்காடு ரோடு புத்தூர்பக்கம் வர சொன்னதின் பேரில் அங்கு சென்று முஜி வந்திருந்த காரில் எங்களை ஏற்றிக்கொண்டு கேரளா சென்று இரவு தங்கி விட்டதாகவும், பின்னர் 21-08-2013 ம் தேதி போலிசார் பிடித்த லாரியையும் மரக்கட்டைகளையும், மரக்கட்டைகள் வைத்திருந்த குடோனையும் என்ன செய்கிறார்கள் என்று பார்க்க வந்தபோது, எங்களுடன் வழிகாட்டியாக வந்த சஜிப், பினு, நவ்சத், மற்றும்

முஜிஸ் ஆகியோர்களுடன் மேற்படி காரில் வந்தோம். போலிசார் ஆகிய நீங்கள் என்னையும் மற்றைவர்களையும் பிடித்ததில் நடந்த சம்பவத்தை சொல்லியும், மேற்கொண்டு விசாரணைக்காக அவர்களை மகாலிங்கபுரம் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்ததில் மேற்படி செம்மரக்கட்டைகள் ராம்குமாருக்கு சொந்தமான ASD குடோனில் செம்மரக்கட்டைகள் உள்ளதாக என்னிடம் கூறினார். இது சம்பந்தமாக தனி அறிக்கை தயாரித்து உயர் அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்தும் அவர்களின் உத்தரவின் பேரில் மேற்படி செம்மரக்கட்டைகளை ஏற்றி வந்த டாரஸ் லாரி AP 26 X 6829 மற்றும் KL 41 B 2929 Innova கார் மற்றும் அது சம்பந்தப்பட்ட 6 நபர்கள் அவர்களிடம் கைப்பற்றப்பட்ட செல்போன்கள் ஆகியவைகளை தனியறிக்கை மூலம் மாவட்ட வன அலுவரிடம் ஒப்படைத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் தனியறிக்கை மாவட்ட வன அலுவலர் மற்றும் துணை இயக்குநர் ஆனைமலை புலிகள் காப்பகத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த தனியறிக்கை அ.சாஆ.1/அ.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

3 முதல் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

Judicial Magistrate No. II,
Pollachi

ஒம்/-ஈ.மணிகண்டன்,பிஏ,பிஎல்

நீதித்துறை நடுவர் எண்.2

பொள்ளாச்சி.